
# திராவிடத்தால் வாழ்கிறோம்

787

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## சத்தமில்லாமல் நிகழ்த்தப்படும் சாதனைகள்!

அயலகக் கல்வி என்பது, கற்றல் திறன் கொண்ட மாணவர்களின் பெரும்கனவு. அவர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும், தனித்திறன் கொண்டவர்களாக, தொழில்முனைவோராக சாதிப்பதற்கும் அயலகக் கல்வி அவசியம். அதை உணர்ந்துதான், நம் திராவிட மாடல் அரசு 'நான் முதல்வன்' திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தின்கீழ், SC /ST மாணவர்கள் பயன்பெறும் வகையில், 'அண்ணல் அம்பேத்கர் அயலகக் கல்வி உதவித் தொகை' திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ், கடந்த ஆண்டு மட்டும் 171 மாணவர்கள் அயலகக் கல்விக்குச் சென்றுள்ளனர். அரசு, சுமார் 30 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. நடப்பு ஆண்டு ரூ.65 கோடி அயலக உயர் கல்வித் திட்டத்துக்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இது தொடர்பாக, சமீபத்தில் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் பேசிய, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான சிந்தனைச் செல்வன், "கடந்த 15 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்குச் சென்று படிக்க விரும்பும் எஸ்.சி / எஸ்.டி மாணவர்களுக்கு ரூ. 4 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், அந்தத் தொகையும் செலவு செய்யப்படாமல் வேறு திட்டங்களுக்கு மாற்றி விடப்பட்டிருக்கின்றன. ஆனால், தி.மு.க அரசு அதில் பல சாதனைகளைச் செய்து வருகிறது" என்றும் தெரிவித்துள்ளார்.

"வெளிநாட்டுக்கு ஒரு மாணவர் படிக்கச் சென்றால், அங்கிருந்தும் ஒரு மாணவர் இங்கு வந்து படிக்க வேண்டும் என்கிற விதி இருந்தது. அந்த விதியைத் தளர்த்த வேண்டும் என அரசிடம் சுட்டிக்காட்டியதும், அந்த விதியையும் அரசு நீக்கியது" என சிந்தனைச் செல்வன் குறிப்பிட்டார். "சத்தமில்லாமல் நிகழ்த்தப்பட்டு வரும் இந்த சாதனையை தி.மு.கழகம் விளம்பரப்படுத்திக் கொள்ளவும் இல்லை" என்றும் அவர் கூறினார். கழகத்தின் திட்டங்கள் தமிழ்நாட்டுப் பெருமைகளாக மாறும் என்பதுதான் அவர் சொல்லாமல் சொல்லும் செய்தி.

## ஃப்ளாஷ்பேக்





ஏ.வீ.இராமநாதன்

### பொங்கல் விழாவில், தளபதி!

2005-ஆம் ஆண்டு எங்கள் 118-வது வட்டத்தில், நடைபெற்ற 'தமிழர் திருநாள்', 'பொங்கல் விழா' நிகழ்ச்சியில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் கலந்துகொண்டார். நிகழ்ச்சியின் முடிவில், போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர் சிறுமியர்க்குப் பரிசுகள் வழங்கி, சிறப்பித்த மகிழ்ச்சித் தருணம், வலது ஓரத்தில் இளைஞர் அணி சார்பில், காப்பாளர் பொறுப்பிலிருந்த நான் வெள்ளுடை அணிந்துள்ளேன்.

**- ஏ.வீ.இராமநாதன், மாவட்டப் பிரதிநிதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உறுதியாக நின்ற அமைப்புகள்

1950-ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் 'திராவிட நாடு' இதழ்களில் வகுப்புவாரி உரிமையின் அவசியத்தை வலியுறுத்தி, ஏராளமான செய்திகளைப் பதிவு செய்தார் அண்ணா. அதேபோல பெரியாரின் 'விடுதலை' ஏடு, போராட்டங்கள், கண்டனக் கூட்டங்கள், தீர்மானங்கள் என பெரியாரின் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தது. வகுப்புவாரி உரிமையை நிலைநாட்ட வேண்டும் என திராவிடர் கழகம், தி.மு.க. ஆகிய அமைப்புகள் உறுதியாக இருந்தன.

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

113

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**





# எம்.எஸ்.சுவாமிநாதன் ஈர நிலப் பூங்கா-போரூர்

## சூழலியல் பாதுகாப்பில் புதிய முயற்சி!

நகர்ப்புற வளர்ச்சி மற்றும் அதிவேக விரிவாக்கம் காரணமாக நகர்ப்பகுதிக்குள் இருக்கும் நீர்நிலைகள் அருகி வருகின்றன. புறநகர்ப்பகுதிகளின் விளைநிலங்கள், காடுகள், ஈரநிலங்கள் மற்றும் தாழ்வான நிலப்பகுதிகளை நகர விரிவாக்கம் படிப்படியாக உட்கொண்டுள்ளது எனலாம். இதன் விளைவாக, நகர்ப் பகுதிகளில், நீர் ஈர்க்கும் திறனானது கணிசமாகக் குறைந்து, வெள்ளம், வறட்சி, நிலத்தடி நீர்ப் பற்றாக்குறை, மற்றும் காலநிலைமாற்றம் ஆகிய இடர்களால் நகரப்பகுதிகளில் அதிக இழப்புகள், சேதாரங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

உலகம் முழுவதும் பெருநகரப் பகுதிகளில் இதற்கான விழிப்புணர்வு உருவாகி வரும் நிலையில், வளர்ந்து வரும் பெருநகரமான சென்னையிலும் இயற்கை ஈரநிலங்களைப் பாதுகாத்து, மீட்டெடுத்தலும், மேலும் புதிய கட்டமைக்கப்பட்ட ஈரநிலங்களை உருவாக்குவதும் இன்றியமையாததாகும். இவை, காலநிலைமாற்றத்தின் பாதிப்புகளைத் தணிக்கவும், நகர்ப்புறப் பல்லுயிர் மேம்பாடு, நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு மற்றும் மீள்தன்மையை உயர்த்தவும் அவசியமாகிறது.

இந்த நிலையில், சூழலியல் அக்கறை கொண்ட நம் திராவிட மாடல் அரசு, சென்னை, போரூர், ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அருகே, செட்டியார் அகரத்தில் போரூர் ஏரியின் வெள்ளப்படுகையாக இருந்த 16.63 ஏக்கர் ஈரநிலத்தை மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சிகளை எடுத்து, அதைச் சிறப்பான வகையில் செயல்பாட்டுக்கும் கொண்டு வந்துள்ளது.

### சூழலியல் முக்கியத்துவம்

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், ரூ.15.75 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்ட அந்த இடம், தற்போது அழகான ஈரநிலப் பசுமைப் பூங்காவாக காட்சி அளிக்கிறது.

விவசாயத் துறையில் 'பசுமைப் புரட்சி'க்கு வித்திட்ட 'வேளாண் விஞ்ஞானி' எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில், 'டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஈரநிலப் பசுமைப் பூங்கா' எனப் பெயரிடப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டுக்கும் இந்தப் பூங்காவை கடந்த மாதம் 20-ஆம் தேதி நமது முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்தப் பூங்காவின் முதன்மையான நோக்கம் சமூகக் கல்வி மற்றும் காலநிலை குறித்த விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்க வேண்டும் என்பதுதான். இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் காலநிலை மாற்றங்கள் குறித்து, தீவிரமாக கவனம் செலுத்தாத நிலையில், நம் அரசு மட்டும் காலநிலை மாற்ற இயக்கத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

அதனால்தான் இந்த ஈரநிலப் பூங்காவை உருவாக்கி, நகரப் பகுதிகளில் ஈரநிலங்களின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையிலான கண்காட்சியையும் அங்கு அமைத்துள்ளது. குறிப்பாக, இந்தப் பூங்கா, இயற்கையாக உள்ள நிலவமைப்புகளைக் கொண்டு நீரியல் - சூழலியல் இணைப்புகளை மீட்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இருந்த மரங்களுடன் புதிதாக செடிகள், கொடிகள், நீர்வாழ்த் தாவரங்களும் நடப்பட்டு













இந்தப் பூங்கா உருவாக்கப்பட்டது. பல்லுயிர் இருப்பிடமாக சுமார் 85-க்கும் மேற்பட்ட பறவை மற்றும் விலங்கின வாழ்விடமாகவும் இந்தப் பூங்கா இருக்கிறது.

### மக்கள் பயன்பாட்டுக்கான பூங்கா

இந்த ஈரநிலப் பூங்காவை, பொது மக்களுக்கான திறந்தவெளிப் பூங்காவாகவும் அரசு அமைத்துள்ளது. அங்குள்ள இயற்கைச் சூழலியல் அமைப்புகளை, மக்கள் அனுபவிக்கும்படி 600 மீட்டர் நீளத்துக்கு மரப் பலகைகளால் ஆன சூழல் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. ஏரியின் நடுவில் சென்று பார்வையிடுவதற்கான பார்வையாளர் மாடம், நடைபாதையில் அமர்ந்து ரசிப்பதற்கான இருக்கை வசதிகள் ஆகியவை உருவாக்கப் பட்டுள்ளன.

குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதிகள், இருக்கை வசதிகளுடன் பூங்காவின் உள்ளே விளையாட்டு மைதானங்களும் அமைக்கப் பட்டுள்ளன. குறிப்பாக, கூடைப்பந்து பேட்மிட்டன் ஆகியவற்றுக்கான விளையாட்டு மைதானங்கள், அவற்றைப் பார்வையிடுவதற்கான இருக்கை வசதிகள், வெளிப்புற உடற்பயிற்சி மையம், கண்காட்சி மேடைகள் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

போரூர் ஏரியை ஒட்டி அமைந்துள்ள மழைநீர் வடிகால் வசதிகளும் மேம்படுத்தப் பட்டுள்ளன. குறிப்பாக, அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மழை வெள்ளத்தின் பாதிப்பைக் குறைக்கும் வகையில் வெள்ளநீர் வடிகால் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பூங்காவின் அமைப்பு என்பது, மழை வெள்ளநீரைப் பஞ்சு போல உறிஞ்சிக் கொள்ளும் **'ஸ்பான்ச் பூங்கா'** என்பதாகவும் இருக்கிறது. குறிப்பாக 90 சதவிகித மழைநீரைச் சேகரித்து, பூமிக்குள் உள்வாங்குவதன்மூலம் வெள்ளத்தின் பாதிப்பைக் குறைத்து, நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்தும்.

முதலமைச்சர் அவர்கள் பூங்காவைத் திறந்து வைத்த சில நாட்களில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத் தலைவரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான சேகர்பாபு அவர்களுடன், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவரும், எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மகளுமான செளமியா சுவாமிநாதன் நேரில் சென்று பார்வையிட்டு, தமிழ்நாடு அரசின் முன்னெடுப்பினைப் பாராட்டிச் சென்றார். "இந்த பூங்கா உருவாக்கத்தின் மூலம் சூழலியல் அமைப்பு மேம்படும்'' என செளமியா சுவாமிநாதன் குறிப்பிட்டார்.

கடலோர நகரங்களின் பாதுகாப்பில் ஈரநிலங்கள் அதிக முக்கியத்துவம் கொண்டவையாக உள்ளன. அவை, வெள்ளத்துக்கு எதிரான பாதுகாப்பினை வழங்கக்கூடியவை என்பது சூழலியல் அறிவியல் சார்ந்து நிரூபிக்கப்பட்டுள்ளது. உலகின் சூழலியல் அக்கறை கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும் வகையில், இந்தியாவில் ஒரு மாநிலம் ஈரநிலைப் பாதுகாப்பில் புதிய முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்துள்ளது என்பது பெருமை வாய்ந்த ஒன்று.

**"உலகின் சூழலியல் அக்கறை கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும் வகையில், இந்தியாவில் ஒரு மாநிலம் ஈரநிலைப் பாதுகாப்பில் புதிய முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்துள்ளது என்பது பெருமை வாய்ந்த ஒன்று."**

...சாதனை தொடரும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131